**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.தே.கிருஷ்ணமூர்த்தி, எம்.காம்., | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் |
| ஆணையாளர், | திருநெல்வேலி. |
| நகராட்சி அலுவலகம், | |
| கடையநல்லூர். | |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:18.03.2020**

**அய்யா,**

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி –அவசரக் கூட்டம் 12.03.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 12.03.2020 அன்று அவசரக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**இணைப்பு –** தீர்மான நகல்கள்

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் தேதி வியாழக்கிழமை காலை 11.30 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்– 1**

வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண்.407 நாள்:14.12.2018ல் வார்டு மறுவரையறை குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டது.

இதனையடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட 13.01.2020ம் தேதிய காணொளி காட்சி கூட்டத்தில் வார்டு மறுவரையறை தொடர்பான அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.575/2020/தேர்தல். நாள்:21.01.2020ல் வார்டு மறுவரையறையினை மறு அறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழிமுறையாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு தயார் செய்யப்பட்ட இந்நகராட்சியின் வரைவு வார்டு மறுவரையறையினை (Draft proposal) மறு அறிவிக்கை செய்வதற்கான கருத்துருவினை உரிய வழி முறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு சமர்ப்பிக்க இந்நகர்மன்ற தீர்மான எண்.23 நாள்.20.02.2020ல் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் 18.02.2020 அன்று பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் தெரிவிக்க பார்வைக்காக வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து 18.02.2020 முதல் 22.02.2020 வரை பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் பெறப்பட்டும் 25.02.2020 அன்று மாவட்ட மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் தென்காசி அவர்களின் தலைமையிலும் மற்றும் 10.03.2020 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி வார்டு மறுவரையறை ஆணையர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கருத்துக் கேட்பு கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினரின் ஆட்சேபனை மற்றும் கருத்துக்கள் பெறப்பட்டது.

மேற்படி கருத்துக்கேட்பு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட மறுவரையறை ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி ஆட்சேபனை வரப்பெற்ற 18 மனுக்களில் 4 மனுக்கள் தமிழ்நாடு வார்டு வரையறை ஒழுங்குமுறை விதிகள் 6(1) a,b,c 2011 மக்கள் தொகை மற்றும் 31.03.2019 குடியிருப்பு வீடுகளின் அடிப்படையில் வார்டு மறுவரையறை மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஆட்சேபனைகள் ஏற்கும் நிலையில் அமையப் பெறவில்லை. மேலும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் விதிகளின்படி வரப்பெற்ற 14 ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்படி மறுவரையறை வார்டு எண்.9 மற்றும் வார்டு எண்.14ல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதி கருத்துரு தயார் செய்யப்பட்டது.

இதன் பொருட்டு இந்நகராட்சிக்கான இறுதி வார்டு மறுவரையறை செய்யப்பட்ட கருத்துருவினை (Final Proposal) மறு அறிவிக்கை செய்வதற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.2958/2017/அ3)**

**தீர்மான எண்.27**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்– 2**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளிலும் பணிபுரியும் தகுதி பெற்ற பணியாளர்களுக்கு 2019–20ம் ஆண்டிற்க தேவையான சீருடைகள், சீருடைகளுக்கான தையற்கூலி, பொறியியல் பிரிவு, பொதுப்பிரிவு மற்றும் பொதுசுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4566/2019எச்1)**

**தீர்மான எண்.28**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 3</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76E 4129க்கு தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்திடும் வகைக்கான உத்தேச செலவினம் ரூ.60000/–க்கும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய தொகை செலுத்தி தகுதி சான்றிதழ் பெற ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்சோக்கி வாகன பழுதுநீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4566/2019எச்1)**

**தீர்மான எண்.29**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 4</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN76E 2758க்கு தகுதிச் சான்றிதழ் பெறும் பொருட்டு பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி வாகனத்திற்கு பழுதுகளை நீக்கம் செய்திடும் வகைக்கான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உரிய தொகை செலுத்தி தகுதி சான்றிதழ் பெற ஏற்படும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்சோக்கி வாகன பழுதுநீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4566/2019எச்1)**

**தீர்மான எண்.30**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 5</u>**

இந்நகராட்சி பேரூந்து நிலையத்தின் வடக்கு பக்கம் கடை எண்.1ஐ திரு.L.அலிபாதுஷா, த/பெ.லியாகத் அலி, 178C/178A, ரோடு எண்.11 (மெஹராஜ் நகர்) என்பவருக்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.15.11.2017ன்படி 01.10.2017 முதல் 30.09.2020 வரை உரிமம் பெற்று நடத்தி வந்தார். இந்நிலையில் தன்னால் கடையினை நடத்த முடியவில்லை எனவும், மேற்படி கடையினை திரும்ப ஒப்படைப்பு செய்வதாகவும் அன்னார் 02.01.2020ம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் அன்னார் 31.03.2020 வரை நிலுவையின்றி வாடகையினை செலுத்தியுள்ளார். எனவே அன்னாரின் உரிமத்தினை 31.03.2020 உடன் ரத்து செய்து 01.04.2020 முதல் மூன்றாண்டுகளுக்கு மறு எலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அன்னார் இவ்வினத்திற்காக ரசீது எண்.8292/17–18 நாள்.20.09.2017ன்படி செலுத்துயுள்ள டெபாசிட் தொகை ரூ.100000/– (ஒருலட்சம்) மற்றும் ரசீது எண்.12923/17–18, நாள்.13.11.2017ன்படி செலுத்தியுள்ள கூடுதல் டெபாசிட் தொகை ரூ.49200/–ல் 2018–19ம் ஆண்டுக்கு ஈடுசெய்யப்பட்ட தொகை ரூ.19588/– போக மீதம் ரூ.29612/– ஆகமொத்தம் ரூ.129612/–ஐ திரு.அலிபாதுஷா என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.16/2020/அ3)**

**தீர்மான எண்.31**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 6</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.748/08/குவ2, நாள்.21.09.2009ல் தெரிவித்துள்ளவாறு புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் தொடர்பாக 2019–20ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய சாலை பராமரிப்பு கட்டணம் மற்றும் மேற்பார்வைக் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | சாலையின் வகை | சாலையின் நீளம் | 2018–19ம் ஆண்டிற்கான சாலை பராமரிப்பு கட்டணம். தீர்மான எண்.128, நாள்.24.05.2018 | 2019–20ம் ஆண்டுக்கு நிர்ணயம் செய்யப்படும் சாலை பராமரிப்பு கட்டணம் (5% உயர்வுக்கு பின்னர் | மேற்பார்வை கட்டணம் |
|---|---|---|---|---|---|

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| 1. | மண் மற்றும் மெட்டல் ரோடு | 0–30 மீட்டர்வரை | ரூ.1630 | ரூ.1712 | ரூ.1707 |
| 2. | மண் மற்றும் மெட்டல் ரோடு | 31–90 மீட்டர் வரை | ரூ. 2561 | ரூ.2689 | ரூ.3757 |
| 3. | தார்சாலை | 0–30 மீட்டர்வரை | ரூ. 3491 | ரூ.3666 | ரூ.2007 |
| 4. | தார்சாலை | 31–90 மீட்டர் வரை | ரூ. 4423 | ரூ.4644 | ரூ.4057 |
| 5. | சிமிண்ட் சாலை | 0–30 மீட்டர்வரை | ரூ. 4034 | ரூ.4236 | ரூ.2094 |
| 6. | சிமிண்ட் சாலை | 31–90 மீட்டர் வரை | ரூ. 4962 | ரூ.5210 | ரூ.4132 |

**(ந.க.எண்.1758/2018/இ2)**

**தீர்மான எண்.32**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 7</u>**

இந்நகராட்சியில் ஆணையராக பணிபுரிந்து வரும் திரு.தே.கிருஷ்ணமூர்த்தி, நகராட்சி ஆணையாளரின் ஜனவரி–2020 மற்றும் பிப்ரவரி–2020ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும் ஜனவரி–20 மற்றும் பிப்ரவரி–20ம் மாதத்திற்கான பயணப்பட்டியல் தொகை முறையே ரூ. 9080/– மற்றும் ரூ. 9660/–ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஆணையருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 72/2020/சி1)**

**தீர்மான எண்.33**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 8</u>**

தூய்மை இந்தியா திட்டம் 2018–19 திடக்கழிவு மேலாண்மை பணிகளின் கீழ் வார்டு எண்.8 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு, சமுதாய கழிப்பிடம் மேல்புறம் உள்ள இடத்தில் புதிதாக 35PD நுண்ணுயிர் உரக்குடில் மையம் (MCC) ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு திரு.U.சேக் அப்துல் காதர் ஒப்பந்ததாரருக்கு 20.09.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. மேற்காணும் பணியினை துவங்கி ஆரம்பிக்கும் நிலையில் அப்பகுதி பொதுமக்கள் தொடர்ந்து அதிருப்தி தெரிவித்து வரப்பட்டதால் அப்பகுதி அருகே சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு ரேசன் கடை எதிரில் உள்ள பாப்பான் கால்வாய், ஓடை கரை காலி இடத்தில் மேற்காணும் பணியினை மேற்க்கொள்ள முடிவு செய்யப்பட்டது. மேற்காணும் இடத்தினை பார்வையிட்ட தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம் திருநெல்வேலி, மண்டல செயற்பொறியாளர் அவர்கள் பாப்பான்கால் ஓடை கரை காலி இடத்தில் கட்டுவதற்கு தடையில்லாச் சான்று (NOC) வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே அரசு திட்ட பணியின் அவசர அவசியத்தை கருத்திற் கொண்டு மாற்று இடமாக வார்டு எண்.11 மாவடிக்கால் சுடுகாடு வளாகம் டவுண் சர்வே எண்.7/2 அரசு புறம்போக்கு இடத்தில் இப்பணிக்கு ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.U.சேக் அப்துல் காதர் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மேற்படி இடத்தில் நுண்ணுயிர் உரக்குடில் மையம் Micro Compost Centre (MCC) அமைப்பதற்கு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கான கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1327/2018/இ1)**

**தீர்மான எண்.34**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 9</u>**

திரு.இராமசுந்தரமணி முன்னாள் வருவாய் ஆய்வாளர் என்பவர் சென்னை, உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடர்ந்த WP.(MD) No.21994/2019 வழக்கில் அரசுச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களை

பிரதிவாரியாக சேர்க்கப்பட்டுள்ளதால் வழக்கின் அவசர அவசியத்தினை கருதி விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது அலுவலக தொலைபேசி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கின் தன்மையினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி WP.(MD) No.21994/2019 வழக்கிற்கு எதிர்வாதுரை தயார் செய்த வகைக்கு திரு.எம். சரவணகுமார், வழக்கறிஞருக்கு வழக்கு கட்டணம் ரூ.5000/– வழங்க மன்ற அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 2933 /2012/சி1)**

**தீர்மான எண்.35**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 10</u>**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.9 ஜவஹர் தெருவில் உள்ள குடிநீர் வால்வு தொட்டி மிகவும் பழுதடைந்து உள்ளது மற்றும் வார்டு எண்.15 பஜார் தெரு, அல்லிமூப்பன் தெரு சந்திப்பில் உள்ள வாறுவால் மிகவும் பழுதடைந்து உள்ளதால் அதனை அவசர அவசியம் கருதி சீர் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.72000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1198/2020/இ1)**

**தீர்மான எண்.36**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 11</u>**

இந்நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள கடைஎண்.1க்கு இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.14.07.2017 மற்றும் நகர்மன்ற தீர்மானம் எண்.188, நாள்.25.05.2017ன்படி 01.06.2017 முதல் 31.03.2020 வரை திரு.மு.சங்கர், த/பெ.முருகன், 14/52 புதுமனை தெரு, காசிதர்மம் என்பவருக்கு உரிமம் வழங்கப்பட்டு அன்னார் கடையினை நடத்தி வருகிறார். இந்நிலையில் அன்னார் தன்னால் தொடர்ந்து கடையினை நடத்த முடியவில்லை என்பதால் இக்கடையினை நகராட்சி வசம் திரும்ப ஒப்படைப்பு செய்வதாக 10.03.2020ம் தேதிய மனுவில் தெரிவித்துள்ளார். மேலும் அன்னார் இக்கடைக்கு 29.06.2017ல் ரூ.150000/– 19.06.2017ல் ரூ.54000/– மற்றும் 31.03.2018ல் ரூ.19440/– வைப்புத்தொகையாக ஆக மொத்தம் ரூ.223440/– செலுத்தியுள்ளார். மேற்கண்ட தொகையில் அன்னார் 2017–18ம் ஆண்டுக்கு செலுத்த வேண்டிய வாடகைத்தொகை ரூ.104600/– ஈடுசெய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு ஈடுசெய்யப்பட்டது போக தற்போது 2018–19 தணிக்கை முடிவு பெற்ற ஆண்டுகளில் அன்னார் பெயரில் வருவாய் நிதி வைப்புத்தொகை பதிவேடு கணக்கு எண்.4018 பக்க எண்.72 வ.எண்.37ல் ரூ.54000/–, பக்கம் எண்.155ல் 19440/– ஆக மொத்தம் ரூ.118640/– இருப்பாக உள்ளது. மேற்கண்ட தொகையில் அன்னார் 01.04.2019 முதல் 31.03.2020 வரைக்கு இக்கடைக்கு செலுத்த வேண்டிய வாடகைத்தொகை ரூ.9000x12=108000/– மற்றும் சேவைவரி ரூ.10600/–ஐ ஈடுசெய்து அன்னாரின் உரிமத்தினை 31.03.2020 உடன் ரத்து செய்து 01.04.2020 முதல் மூன்றாண்டுகளுக்கு மறுபடியும் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரி ஏல நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேற்கண்ட பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்புதுறை, திருநெல்வேலி வழியாக விளம்பரம் செய்யவும் அதற்கான செலவுத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1317/2014/அ3)**

**தீர்மான எண்.37**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்– 12</u>**

இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.293, 294 மற்றும் 296 நாள்.30.062010ன்படி இந்நகராட்சி பேரூந்து நிலையத்திலுள்ள முதல் தளம் கடை எண்.9 தென்பக்க கடை எண்.1 மற்றும் தென்பக்க கடைஎண்.2க்கு 01.07.2010 முதல் உரிமம் வழங்கப்பட்டு 31.03.2019 உடன் ஒன்பது ஆண்டுகள் முடிவடைகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.15316.2016.ஆர்3 நாள்.15.12.2016 அவர்களின் கடிதத்தில் நகராட்சி கடைகளுக்கு உரிமம்

வழங்கிய ஒன்பது ஆண்டு காலத்திற்கு பின்னர் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.5640/2016/அ3 நாள்.18.12.2018ன் வாயிலாக மேற்படி கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்து அறிக்கை சமர்ப்பிக்க இந்நகராட்சி பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர், கணக்கர் (ம) வருவாய் ஆய்வாளர்(பொறுப்பு) மற்றும் வருவாய் உதவியாளர்கள் இரண்டு நபர்களைக் கொண்ட கண்காணிப்பு கமிட்டி அமைக்கப்பட்டது. மேற்படி கமிட்டி சமர்ப்பிக்கப்பட்ட 02.01.2019ம் தேதிய அறிக்கையின் படியும், சார் பதிவாளர், கடையநல்லூர் அவர்களின் 20.12.2018ம் தேதிய வழிகாட்டு மதிப்பின்படியும் கீழ்கண்டவாறு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டது.

| கடை எண். | பெயர்/ முகவரி | ஏற்கனவே உள்ள வாடகை | தற்போது மறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை |
|---|---|---|---|
| முதல் கடை எண்.9 (வ.வி.எண்.201232) | திரு.எஸ்.பரமபூல் துரை 18பி, தெற்கு ரதவீதி, மேலக்கடையநல்லூர். | ரூ.1587/– | ரூ.1900/– |
| தென் பக்க கடை எண்.1 (வ.வி.எண்.201422) | திரு.ஏ.பி.ஏ. மைதீன், 83, மெயின் ரோடு, கிருஷ்ணாபுரம். | ரூ.3197/– | ரூ.3700/– |
| தென்பக்க கடை எண்.2 (வ.வி.எண்.20171837 | திரு. இ.சு. சிவஞானம், 24, கற்பக சுந்தர விநாயகர் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம். | ரூ.3903/– | ரூ.4500/– |

இவ்வாறு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்ட கடைகளுக்கு திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக மண்டல கண்காணிப்பு குழுவின் ஒப்புதல் வேண்டி இவ்வலுவலக 01.11.2019ம் தேதிய கடிதத்தின்படி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வருவாய் ஆய்வாளர்(பொறுப்பு) அவர்கள் இதுசார்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அலுவலகம் நேரடியாக சென்று விபரம் பெறப்பட்டதில் இக்கடைகளுக்கு மன்ற அனுமதி பெற்று ஏற்கனவே உள்ள வாடகையில் 15 சதவீதத்திற்கு குறையாமல் நகராட்சியே வாடகை மறுநிர்ணயம் செய்து கொள்ளலாம் என தெரிவித்துள்ளதாக 02.11.2019ம் தேதிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அதன்படி மேற்கண்ட கடைகளுக்கு மறுநிர்ணயம் செய்யப்பட்டதற்கு ஒப்புதலுக்காகவும், 01.04.2019 முதல் 31.03.2022 வரை மூன்றாண்டுகளுக்கு உரிமத்தினை புதுப்பித்து உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

(ந.க.எண். 5640 /2017/அ3)

**தீர்மான எண்.38**

அனுமதிக்கப்பட்டது.

(ஒம்)தே.கிருஷ்ண மூர்த்தி,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.